ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1721/25 - 2011 අගෝස්තු 02 වැනි සිකුරාදා - 2011.09.02
1721/25 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பதுளை கத்தரகம தேவாலயத்தின் வருடாந்த பெரஹரா உற்வசம்

(362 ஆம் அத்தியாயமான) தலயாத்திரை கட்டளைச் சட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10ஆம் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1951, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் 1955, மாச்சு மாதம் 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க ஒப்படைப்பு (பிரதேச செயலாளர்களுக்கு) சட்டத்தின்படியும், 2009.10.02 ஆந் திகதிய 1622 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலிலும் வெளியிடப்பட்ட பதுளை கத்தரகம தேவாயலத்தின் (வருடாந்த பெரஹரா உற்வசம்) தொடர்பான யாப்பின் படியும் பதுளை பிரதேச செயலாளர் காமினி மஹிந்தபால ஜோபியஸ் ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2011 பதுளை, கத்தரகம தேவாலயத்தின் வருடாந்த பெரஹரா உற்வசம் - 2011 தொடர்பாக கீழ் குறிப்பிட்டுள்ள ஆணைகளை பிறப்பிக்கிறேன்.

1. 2011, ஓகத்து 30 ஆம் திகதி பதுளை கத்தரகம தேவாயலத்தின் வருடாந்த பெரஹரா உற்வசம் ஆரம்பிக்கப்பட்டு 2011, செத்தெம்பர் 14 ஆம் திகதி மதியம் பெரஹரா ஊர்வலம் தேவாலயத்தை வந்தடைந்தவுடன் நிறைவுறும் என்பதை அறியத்தருகிறேன்.

2. பெரஹராவின் பயண மார்க்கம் :

   பதுளை கத்தரகம தேவாலயத்திலிருந்து பதுளை கீழ் வீதி, பசறை வீதி (முத்தியங்களை சுற்று), லொன்டன் வீதி, அநகாரிக்க தர்மபால மாவத்தை, கொக்கோவத்த வீதி, உதயராஜ மாவத்தை, இராஜ வீதி, கட வீதி ஊடாக பதுளை கத்தரகம தேவாலயத்தை வந்தடைதல்.

3. பதுளை கத்தரகம தேவாலய காணி மற்றும் தேவாலயத்திற்கு சொந்தமான சிங்காசனம் அமைந்துள்ள காணி போன்ற இடங்களில் மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் உணவு சமைத்தல் மற்றும் வியாபாரம் செய்தலை தடைசெய்கிறேன்.

4. பெரஹரா காலத்திற்குள் பிரதான பாதைகளில் தனியார் வாகனங்களை நிறுத்தி வைப்பதை தடைசெய்கிறேன். துவிச்சக்கரவண்டி, மாட்டு வண்டி உட்பட அனைத்து வாகனங்கள் எனது அல்லது தேவாலய பொறுப்பான நிலமே அவர்களின் அனுமதிப்பத்திரம் இல்லாமல் தேவாலய காணிக்குள் உள்வருதலை தடைசெய்கிறேன்.

5. பெரஹரா ஊர்வலம் செல்லும் பாதைகளில் பதுளை மாநகர சபையினால் முறையான அனுமதியுடன் நிர்மானிக்கப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் தற்போது உள்ள நிரந்தர கட்டிடங்கள் சுகாதார திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். காணிப்பகுதிகளை குத்தகைக்கு வாங்கும் வியாபாரிகளினால் தேவாலய பெரஹராவின் பின் தமது தற்காலிக கட்டிடங்களை அகற்றியதன் பின் பெரஹரா பயணிக்கும் மார்க்கம் மற்றும் தேவாலய காணிக்குள் உள்ள பொலித்தீன் உட்பட அனைத்து குப்பைகளையும் ஒன்று சேர்த்து பொது சுகாதார பரிசோதகரின் ஆலோசனையின்படி அகற்ற வேண்டும்.

6. என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிபத்திரம் இல்லாமல் வணக்கத்திற்குரிய காணி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் எந்தவொரு தற்காலிக கட்டிடங்களையும் அமைப்பதை தடைசெய்கிறேன்.

7. எவரேனும் ஒருவரினால் என்னிடம் அல்லது பதுளை மாநகர சபையின் அனுமதி இல்லாமல் பாதையாக பயன்படுத்துதலோ அல்லது ஒதுக்குவதோ அல்லது ஏதேனும் காணி அல்லது வணக்கத்திற்குரிய பிரதேசத்திற்குள் ஏதேனும் காணியை பயன்படுத்தி குடிசையோ அல்லது ஏதேனும் கட்டிட நிர்மாணிப்போ அல்லது பெரிதாக்குதலோ மேற்கொள்ளக்கூடாது.

8. பட்டாசு போன்றவற்றை பிரதேசத்திற்குள் பற்றவைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

9. பிரதேச செயலாளரின் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரின் அனுமதி இல்லாமல் எவரேனும் ஒருவரினால் பாசறை பிரதேசங்களில் சீட்டுகள், கொடிகள் விற்பனை மற்றும் வேறு வகையான எந்தவொரு விடயத்திற்காகவும் அல்லது பங்களிப்பு நிதி வசூலிக்கவும் கூடாது.

காமினி மஹிந்தபால ஜோபியஸ்,
பிரதேச செயலாளர்,
பதுளை.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.